மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல்லில் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியும்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாமக்கல் தொகுதியிலுள்ள பல குடும்பங்கள் அந்தத் தொழிற்சாலையை நம்பிக் கொண்டு இருந்தன. அப்படிப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டதற்கான காரணங்களையும், அதில் வேலை செய்த தொழிலாளர்களுடைய தற்போதைய நிலை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17.1-1977 ஆம் ஆண்டு முதல் இந்த ஆலையை 'தாய்' நிறுவனம் எடுத்து நடத்தியது. 1978 ஆம் ஆண்டு முதல் உற்பத்தியை ஆரம்பித்தது. ஒரு நாளைக்கு 15 மெட்ரிக் டன் அரிசி தவிடும், 20 மெட்ரிக் டன் எண்ணெய் பிண்ணாக்கு அறைக்கும் திறன் உடைய இந்த ஆலை குறைந்த திறன் அறவைக் கொண்டதால் நிகர லாபம் ஈட்டித் தர இயலவில்லை. எனவே, இந்த ஆலை நட்டத்தில் இயங்கத் தொடங்கியது. 14–9–1984-ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இந்த ஆலையின் செயல்பாட்டை ஆராய்ந்து இந்த ஆலையை மூடுவதற்கு அரசுக்கு சிபாரிசு செய்தது. 14–10–1988-ல் இந்த ஆலையை மூடுவது எனஅரசு முடிவு செய்தது. இந்த ஆலையில் பணியாற்றிக் கொண்டு இருந்த 30 நிரந்தரப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்படவில்லை. மாறாக வேறு இடங்களில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

14—

சத்திரப்பட்டியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள்.

*9905—திரு. தி. சாத்தையா: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) இராஜபாளையம் ஒன்றியம் சத்திரப்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

1992 செப்டம்பர் 21]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்'

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டுவசதித் திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் சத்திரப்பட்டி நகரப் பகுதியில் குடியிருப்புத் திட்டம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதிக்கான தேவை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றது. இது குறித்து நிர்ணயம் செய்யப்பட்ட பின் நிலம் கிடைப்பதற்கேற்ப திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளில் கூட அடைய முடியாத முன்னேற்றத்தைக் கடந்த ஒரு ஆண்டில் மட்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எனது தொகுதியான இராஜபாளையம் தொகுதி அடைந்து உள்ளது என்பதை பெரு மகிழ்ச்சியோடு எனது தொகுதி மக்கள் சார்பாக கூறிக்கொள்கிறேன். இது போல் எனது தொகுதியில் உள்ள சத்திரப்பட்டி கிராமம் தொழிலில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள ஒரு ஏரியாவாகும். சத்திரப்பட்டி பேண்டேஜ் கிளாத் உற்பத்தியில் உலக நாடுகள் அளவில் பெயர் பெற்ற ஊராகும். இந்த ஏரியாவில் அதிகமான மில் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் போதிய வீட்டு வசதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த வீடு கட்டும் பணியில் குறைந்தது ஒரு ஆயிரம் வீடுகளாவது கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுகின்ற எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதியிலிருந்து எவ்வளவு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதைப் பொறுத்தும், அரசால் நியமிக்கப்பட்டிருக்கின்ற குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் நிலம் எவ்வளவு வாங்கப்பட்டு இருக்கிறது, எவ்வளவு நிலம் கிடைக்கப்பெற்றிருக்கிறது என்பதைப் பொறுத்தும் அரசு சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் செயற்படுத்த உத்தேசித்திருக்கிறது. அந்த அடிப்படையில் கோரிக்கை அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்குமானால் ஆயிரம் வீடுகள் அல்ல எவ்வளவு வீடுகளுக்கு கோரிக்கைகள் வருகிறதோ அவ்வளவு கோரிக்கைகளுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 செப்டம்பர் 21]

முற்பகல் 10-55

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிமாண்ட் நோட்டிபிகேஷன் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எ போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றேன். கோரிக்கை மனுவினுடைய எண்ணிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. வீட்டுவசதி வாரியத்திற்கு கோரிக்கை மனு கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மனுக்கள் கிடைக்கப்பெற்ற பிறகு, நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இதற்குண்டான செயல்பாடுகள் குறித்து அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 15, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர். 15—

கந்தர்வ கோட்டையில் கல்யாண மண்டபம்

*9814—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கந்தர்வகோட்டையில் சமூகநலத்துறையின் சார்பில் கல்யாண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி (சமூக நலத்துறை அமைச்சர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது எல்லா இடங்களிலும் திருமணக் கூடங்கள் கட்டப்படுகின்றன. கந்தர்வகோட்டைப் பகுதியைப் பொறுத்த வரையில், இந்தக் கோரிக்கையை மிக நீண்ட நாட்களாக அந்த மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியென்றால், எந்த அடிப்படையில் திருமணக்கூடங்கள் தமிழகத்தில் இப்போது ஆரம்பித்து கட்டப்படுகின்றன என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மூலம் எந்த திருமணக் கூடங்களும், எங்கேயும் கட்டப்படுவதில்லை. திருமண உதவித் திட்டங்களை மட்டும் இத்துறை செயல்படுத்துகிறது.